# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/25 - 2016 දෙසැම්බර් මස 06 වැනි අඟහරුවාදා - 2016.12.06

*1996/25 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

திருத்தம் செய்தல்

**இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

2014.08.28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்கத்தையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2015.07.29 ஆந் திகதிய 1925/59 ஆம் இலக்கத்தையுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் திருத்தியமைக்கப்பட்டதுமான இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு கீழ்க்குறிப்பிடப்படும் திருத்தங்கள் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றிக் காணப்படும்.

1. **நடைமுறைப்படுத்தப்படும் திகதி** :
   இச் சேவைப் பிரமாணக் குறிப்பானது 2006.01.01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

15. **இடைக்கால ஏற்பாடுகள்**:
   இடைக்கால ஏற்பாடுகள் 2014.12.31 ஆந் திகதி வரை வலுவிலிருக்கும்.

**குறிப்பு**.- இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு திணைக்களத்துக்கும் விசேடமான ஏற்பாடுகள் காணப்படுமாயின் பதவிக்கு உரித்துடைய ஆட்சேர்ப்பு நடைமுறையினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

15.1. **II ஆந் தரத்துக்குப் பதவியுயுர்த்துதல்**

I. 2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு III ஆந் தரத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ள அலுவலரொருவர், 1988.06.07 ஆம் திகதிய 509/07 ஆம் இலக்கத்தையுடைய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் அதற்கு உரித்துடைய திருத்தத்தின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ளதற்கு இணங்க சேவையின் II ஆம் வகுப்பின் II ஆந் தரத்திலிருந்து II ஆம் வகுப்பின் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக பூரணப்படுத்த வேண்டிய சகல தகைமைகள் மற்றும் தேவைப்பாட்டினை முழுமைப்படுத்திய திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் இடைக்காலத்தினுள் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர்.

II. மேற்குறிப்பிட்டவாறு சேவையின் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவது தொடர்பான சிபாரிசினை பொது நிர்வாக விடய சார் அமைச்சின் செயலாளரினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படுகின்றது.

**15.2. I ஆந் தரத்திற்கு தரமுயர்த்துதல் :**

I. *2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு II ஆந் தரத்துக்கு உள்வாங்கப்பட்ட அல்லது இடைக்காலத்தினுள் II ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள், இடைக்காலத்தினுள் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமாயின் அத்திகதி முதல் அமுல்படுத்தப்படும் வகையில் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.*

(அ) பதவியுயர்த்தப்படும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்களினுள் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் ;

(ஆ) பதவியுயர்த்தப்படும் திகதிக்கு உடன்முன்னரான 05 வருடங்களினுள் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

II. மேற்குறிப்பிட்ட சேவையில் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவது தொடர்பான சிபாரிசினை பொது நிர்வாக விடய சார் அமைச்சின் செயலாளரினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படுகின்றது.

**15.3. விசேட தரத்துக்கு பதவியுயர்த்துதல் :**

I. *2006.01.01 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் இணைந்து I ஆந் தரத்துக்கு உள்வாங்கப்பட்ட அல்லது இடைக்காலத்தினுள் I ஆந் தரத்துக்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள், இடைக்காலத்தினுள் சேவைப் பிரமாணத்தின் 10.30.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின், சேவைப் பிரமாணத்தின் 10.3.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைக் குழுவின் மூலம் நேர்முகப்பரீட்சையொன்றில் ஈடுபடுத்தப்பட்டு விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப, சேவை மூப்பு மற்றும் திறன் அடிப்படையில் விசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.*

**குறிப்பு**- இதற்கு மேலதிகமாக ஒவ்வோர் திணைக்களத்துக்கும் விசேட ஏற்பாடுகள் காணப்படுமாயின் பதவிக்கு உரித்துடைய ஆட்சேர்ப்பு நடைமுறையினுள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,*

எச். எம். காமினி செனவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177,
நாவல வீதி, நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05,
2016, நவெம்பர் 28.

12- 831

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.